மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்தத் திட்டம் தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனை முடிந்தவுடன் அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்படும். அப்பொழுது நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. தே. கேசவலு : தலைவரவர்களே, சங்கராபுரம் பகுதிக்கு வரும் வாய்க்காலை கல்லக்குறிச்சிக்கும் விரிவுபடுத்தும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நான் ஏற்கனவே பதில் சொன்னேன், கல்லக்குறிச்சி வட்டத்திலும் உள்ள நிலங்களுக்குப் பாசன வசதியளிக்க ஒரு திட்டம் உள்ளது.

வைகையிலிருந்து தண்ணீர்

*** 420 வினு—திரு. எஸ். காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை கோட்டம், முதுகுளத்தூர் வட்டம், கிருதமால் நதி வழியாக வைகை நதியிலிருந்து தண்ணீர் விடும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் என்ருல், அத்திட்டம் எப்பொழுது செயல்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

குடதலையாற்றின் குறுக்கே மேம்பாலம்

*** 421 வினு—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் வட்டம், குடதலையாற்றின் குறுக்கே பாகல்மேடு—தாமரைப்பாக்கம் இணைப்புச்சாலை ஆகியவற்றினை இணைக்க ஒரு மேம்பாலம் கட்ட செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.